அந்தப் பகுதியினுடைய முன்னேற்றத்திற்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு சிறப்பான முறையில் நடவடிக்கையினை எடுக்கும் என்ற கருத்தினை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக், மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

39—

விற்பனை நிலையம்

*19954—**திரு. எம்.கே. அசோக்:**

மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளச்சேரி தொகுதி, திருவான்மியூர் பகுதியில் கதர் கிராமத் தொழில் வாரியம் சார்பாக விற்பனை நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 11-20

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னித் தமிழை கணினித் தமிழாக மாற்றிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, அவைக்கு விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதி, திருவான்மியூர் பகுதியில் விற்பனை மையம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், எதிர்காலத்தில் கோரிக்கை ஏதேனும் பெறப்பட்டால், தேவையின் அடிப்படையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக் அவர்கள்.*

2013 பிப்ரவரி 8]

திரு. எம்.கே. அசோக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தங்கத் தாரகை, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். வேளச்சேரி தொகுதிக்குட்பட்ட அடையாறு பகுதியில் வெளிநாட்டவர் அதிகமாக வந்து செல்லும் இடமான அன்னி பெசன்ட் அம்மையாரால் துவங்கப்பட்ட பிரம்ம ஞான சபையும், திருவான்மியூரில் அமைந்துள்ள இந்தியக் கலை மற்றும் கலாச்சார மையமான கலாஷேத்ராவும் அமைந்துள்ளன. மேலும், வெளிநாட்டவர்களைக் கவரக் கூடிய, கலைச் சிற்பங்கள் நிறைந்த மாமல்லபுரத்திற்கு நுழைவு வாயிலாக வேளச்சேரி தொகுதி அமைந்துள்ளது. அங்கு விற்பனை மையம் அமைத்துத் தரப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவ்வளவுதானா? துணைக் கேள்வி இல்லையா? (குறுக்கீடு)

வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

40—

சுற்றுலா மையம்

***5458—திரு. கு. லிங்கமுத்து:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டு ஒன்றியம், அரவட்லா மலைப் பகுதியைச் சுற்றுலா மையமாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தொகுதி, பேரணாம்பட்டு ஒன்றியம், அரவட்லா எழில்மிகு மலைப் பகுதி, கடல் மட்டத்திலிருந்து சுமார் 1,318 அடி உயரத்திலும், வேலூரிலிருந்து 66 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. எழில்மிகு அரவட்லா மலையைச் சுற்றி சுற்றுலா மையமாக்கி, அங்குள்ள சுமார்